முருகப்பெருமான் துணை

**மகான் மயூரேசர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**30.05.2022**, திங்கட்கிழமை

1. தருமனே ஆறுமுக அரங்கனே
தணிகாசலன் சக்தியாக வந்து
கருமவினை விரட்டிக் காத்திடும்
கலியுக ஞானியே தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
ஆசிபட சுபகிருது விடை திங்கள்
அறிவிக்க மூவையோர் திகதி சோம வாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 16 ம் நாள், 30.05.2022 திங்கட்கிழமை)
3. வாரமதில் மயூரேசர் யானும்
வழங்குவேன் உலகநலம் பெற
பாரதம் துவங்கி உலகமெல்லாம்
பக்திமிக்க அரங்கன் சன்மார்க்கம்
4. சன்மார்க்கம் பரவி இனிதே
சடாட்சர சக்தியாக நிரம்பி
துன்மார்க்கம் யாவும் விலகும்
தூய ஞான ஆட்சி மலரும்
5. மலரவே அரங்கன் வகுத்த
மக்களை தேற்றும் தயவை
வளரவைத்துத் தொண்டர்படை
வையகத்தை காக்க வேண்டும்
6. வேண்டி மாதருமம் தன்னை
விடாது எங்கும் கிளைகளாக
தொண்டு வழி உயர்த்தியே
தொடர் தருமம் புரிந்துவர
7. வருகவே வையகம் தானும்
வளர்ச்சிக் காணும் ஞானவழி
முருகப் பெருமான் வழிபாடு பெருகி
முழுமை ஞானம் யாவர்க்கும் கிட்டும்
8. கிட்டவே ஆளுமை சபை
குறைவிலா ஞானவான்கள் நிரம்ப
கட்டம் தரா சட்டங்களியற்றி
கருணையே வடிவான ஆளுமை காணும்
9. காணவே அரங்கன் காட்டும்
கட்டாய தரும தயவு நெறி
ஞானமாக மக்கள் ஏற்று
நம்பி வந்தால் போதுமப்பா

10. அப்பனே மாற்றம் தனை சடுதி
அகிலம் கண்டு நன்கு
சுப்பன் தலைமைக்கு வரும்
சுபிட்சம் குன்றா ஓங்கும்

11. ஓங்கார குடில் படைத்த ஞானி
ஓங்காரன் சொல் கேட்டால்
ஆங்காரம் விலகி அமைதி கூடிட
அகிலம் சர்வ பாதுகாப்பும் பெறும்

அருளாசி முற்றே

—சுபம்—